# பெப்ரவரி – 10 – பொதுக்கால 05ம் ஞாயிறு

## “அஞ்சாதே இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” (லூக் 5:10)

**முதல் வாசகம் : எசாயா 6 : 1 – 8**

உசியா அரசர் மறைந்த ஆண்டில், மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன் அவரது தொங்கலாடை கோவிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேல் சேராபீன்கள் சூழ்ந்து நின்றனர் ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன் ஒவ்வொருவரும் இரண்டு இறக்கைகளால் தம் முகத்தை மூடிக்கொண்டனர் இரண்டு இறக்கைகளால் தம் கால்களை மூடி மறைத்தனர் மற்ற இரண்டால் பறந்தனர். அவர்களுள் ஒருவர் மற்றவரைப் பார்த்து ”படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர் மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது” என்று உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தார். கூறியவரின் குரல் ஒலியால் வாயில் நிலைகளின் அடித்தளங்கள் அசைந்தன் கோவில் முழுவதும் புகையால் நிறைந்தது. அப்பொழுது நான் ”ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான் படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே” என்றேன். அப்பொழுது சேராபீன்களுள் ஒருவர் பலி பீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து அதைத் தம் கையில் வைத்துக் கொண்டு என்னை நோக்கிப் பறந்து வந்தார். அதனால் என் வாயைத் தொட்டு, ”இதோ, இந்நெருப்புப்பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னைவிட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப் பட்டது, ”என்றார். மேலும் ”யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?” என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு, ”இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” என்றேன்.

**பதில்பாடல்:** தெய்வங்கள் முன்னிலையில் உம்மைப் புகழ்வேன்.

**இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 15 : 1 – 11**

சகோதர சகோதரிகளே, உங்களுக்கு நான் அறிவித்த நற்செய்தியை நினைவுறுத்த விழைகிறேன். அதை நீங்களும் ஏற்றுக் கொண்டீர்கள் அதிலே நிலைத்தும் நிற்கிறீர்கள். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியை நீங்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தால் அதன் வழியாக மீட்பு அடைவீர்கள் இல்லையேல் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பொருளற்றதே. நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக்கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே. மறைநூலில் எழுதியுள்ள வாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும் அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரேநேரத்தில் தோன்றினார். அவர்களுள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றனர் சிலர் இறந்துவிட்டனர். பிறகு யாக்கோபுக்கும் அதன்பின் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப்பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார். நான் திருத்தூதர்களிடையே மிகக்கடையவன். திருத்தூதர் என அழைக்கப்பெறத் தகுதியற்றவன். ஏனெனில் கடவுளின் திருச்சபையைத் துன்புறுத்தினேன். ஆனால் இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான். அவர் எனக்களித்த அருள் வீணாகிவிடவில்லை. திருத்தூதர்கள் எல்லாரையும்விட நான் மிகுதியாகப் பாடுபட்டு உழைத்தேன். உண்மையில் நானாக உழைக்கவில்லை என்னோடிருக்கும் கடவுளின் அருளே அவ்வாறு உழைக்கச் செய்தது. நானோ மற்றத் திருத்தூதர்களோ யாராயிருந்தாலும் இதையே பறைசாற்று கிறோம். நீங்களும் இதையே நம்பினீர்கள்.

**நற்செய்தி : லுக்கா 5 : 1 – 11**

அக்காலத்தில் ஒரு நாள் இயேசு கெனசரேத்து ஏரிக்கரையில் நின்றுகொண்டிருந்தார். திரளான மக்கள் இறைவார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக் கொண்டிருந்தனர். அப்போது ஏரிக்கரையில் இரண்டு படகுகள் நிற்கக் கண்டார். மீனவர் படகைவிட்டு இறங்கி, வலைகளை அலசிக் கொண்டிருந்தனர். அப்படகுகளுள் ஒன்று சீமோனுடையது. அதில் இயேசு ஏறினார். அவர் கரையிலிருந்து அதைச் சற்றே தள்ளும்படி அவரிடம் கேட்டுக் கொண்டு படகில் அமர்ந்தவாறே மக்கள் கூட்டத்துக்குக் கற்பித்தார். அவர் பேசி முடித்தபின்பு சீமோனை நோக்கி, ”ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு போய், மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்” என்றார். சீமோன் மறுமொழியாக, ”ஐயா, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்” என்றார். அப்படியே அவர்கள் செய்து பெருந் திரளான மீன்களைப் பிடித்தார்கள். வலைகள் கிழியத் தொடங்கவே, மற்றப் படகிலிருந்த தங்கள் கூட்டாளிகளுக்குச் சைகைகாட்டித் துணைக்கு வருமாறு அழைத்தார்கள். அவர்களும் வந்து இரு படகுகளையும் மீன்களால் நிரப்பினார்கள். அவை மூழ்கும் நிலையிலிருந்தன. இதைக்கண்ட சீமோன் பேதுரு, இயேசுவின் கால்களில் விழுந்து, ”ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்” என்றார். அவரும் அவரோடு இருந்த அனைவரும் மிகுதியான மீன்பாட்டைக்கண்டு திகைப்புற்றனர். சீமோனுடைய பங்காளிகளான செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் அவ்வாறே திகைத்தார்கள். இயேசு சீமோனை நோக்கி, ”அஞ்சாதே் இதுமுதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” என்று சொன்னார். அவர்கள் தங்கள் படகுகளைக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்தபின் அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

**தியானம்:** இறை அரசு என்பது ஒரு தனிப்பபட்ட மனிதன் அல்ல. உயிர் அற்ற கட்டடமும் அல்ல. அது பலர் சேர்ந்து உருவான ஒன்று. இதற்காக உழைத்தவர்கள் ஏராளம். அதற்காக துன்பப்பட்டவர்களும் உண்டு, கொல்லப்பட்டவர்களும் உண்டு. யேசு தமது 3 வருட பணிவாழ்வில் பலரை ஆயத்தம் செய்தார். அதில் முதன்மையானவர் இன்று நற்செய்தியில் நாம் காணும் சீமோன் பேதுரு. மீனைப்பிடித்த அவரை மனிதரைப் பிடிப்பவனாக மாற்றுவேன் என்கின்றார் யேசு. அப்போது அதன் அர்த்தம் பேதுருவிற்கு புரிந்திருக்காது. ஆனால் யேசுவின் மறைவின் பின் அது புரிந்திருக்கும். பாறையாக நின்றவர் அவர். அவர்மீது கடப்பட்ட திருச்சபை என்ற கட்டடத்திற்கு கற்களாக தூண்களாக நின்றவர்கள் ஏராளம். அவர்கள் யாவரும் புனிதர்களாக போற்றப்படுகின்றார்கள். அன்று மட்டும் அல்ல இன்றும் அதற்காக துன்பப் படுபவர்களும் உண்டு, கொல்லப் படுபவர்களும் உண்டு. திருச்சபையின் வளர்ச்சிக்காக இன்றும் பலர் உழைக்கின்றார்கள். இன்று நாம் இக் கட்டடம் நிலைத்துநிற்க உதவுகின்றோமா? எந்த வழியில்? வழிநடத்தும் ஆயருக்கும் குருக்களுக்கும் துறவியருக்கும் மட்டும் அல்ல பொது நிலையினராகிய நமக்கும் அந்த பொறுப்பு உண்டு. எமது வாழ்வால், சொல்லால் செயலால் நாம் யேசுவை அறிவிக்க வேண்டும் எம்மைப் பார்ப்பவர்கள் யேசுவை எம்மில் காண வேண்டும். குடும்பத்தில், பலர் கூடும் இடங்களில் நாம் யேசுவிற்கு உகந்த முறையில் இருக்க வேண்டும். அநீதிக்கு துணைபோகாமல், நீதிக்கு துணை நிற்க வேண்டும். அப்போது நாமும் திருச்சபை என்ற கட்டடத்தில் ஒரு கல்லாக மாற முடியும். முதல் வாசகத்தில் பார்ப்பதுபோல் தீட்டுப்பட்ட நாவு எம்மிடம் இல்லதிருக்க வேண்டும். இந்த நாவினால் எத்தனை பேரை நாம் மனம் நோக செய்திருக்கின்றோம். பல நல்ல காரியங்களை செய்ய விடாமல் தடுத்திருக்கின்றோம். அவற்றிற்காக மனம் வருந்துவோம். பவுல் அடிகள் மனம் மாற்றம் பெற்றதுபோல் மாறி அவரைப்போல் திருச்சபையை கட்டிக்காக்க எம்மால் முடிந்த பங்களிப்பை நம் சமுதாயத்திற்கு செய்வோம். குற்றம் குறைகளை பொறுத்து அவற்றை நிவர்த்தி செய்து அனைவருக்கும் நல்வாழ்வு மலர எம் பங்களிப்பை நாம் கொடுப்போம்